# ‘சுதந்திரத்திற்குப் பின்னரான பௌத்த முஸ்லிம் உறவுகளும் அதன் அண்மைக்காலப் போக்குகளும் : கெக்கிராவைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு’


**Supervisor**
*Dr. MIM. Jazeel,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. A. Sithy Nawahira,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


“சுதந்திரத்திற்குப் பின்னரான பௌத்த முஸ்லிம் உறவுகளும் அதன் அண்மைக்காலப் போக்குகளும் : கெக்கிராவைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு” எனும் தலைப்பில் இவ்வாய்வு அமையவுள்ளது. பல இனமக்களை உள்ளடக்கிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாக விளங்குகின்றது. இங்கு பெரும்பான்மையான பௌத்தர்களுக்கு மத்தியில் சிறுபான்மைகளாக முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இதன்காரணமாக இங்கு சமாதான சகவாழ்வு அவசியமான விடயமாக விளங்குகின்றது. இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னரான காலப்பகுதியில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் சுமூகமான உறவுகள் பேணப்பட்ட போதிலும் அண்மைக்காலமாக அவ்வுறவுகளில் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழுகின்ற மாவட்டங்களில் ஒன்றாக விளங்கும் அநுராதபுரத்தில் இவ்வாய்வின் ஆய்வுப்பிரதேசமான கெகிராவை அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் சுமார் 40,000 பௌத்தர்களுக்கு மத்தியில் 12,000 முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்றனர். இப்பிரதேசத்தில் சுதந்திரத்திற்கு முன்னர் பௌத்த முஸ்லிம் உறவுகள் பேணப்பட்டு வந்துள்ள போதிலும் அண்மைக்காலமாக பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையானது இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொள்ளப்படவுள்ளது. இதனால் முஸ்லிம்கள் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு அவர்களின் உரிமைகளையும் இழக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் இது குறித்த விடயங்கள் இன்னும் கட்டமைக்கப்பட்ட ரீதியில் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை.

இவ்வாய்வின் மூலம் பௌத்த முஸ்லிம் ஆரம்ப கால உறவுகளை சுட்டிக்காட்டி தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆராயப்படவுள்ளன. அத்தோடு இது குறித்த இஸ்லாத்தின் கருத்து நிலையும் தெளிவுபடுத்தப்படவுள்ளமையானது இவ்வாய்வின் முக்கியத்துவமாக விளங்குகின்றது.

கெகிராவைப் பிரதேசத்தில் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் பௌத்தர்களும் முஸ்லிம்களும் சமாதானமாகக் கூடி வாழ்ந்தமையை விபரித்தல், கெகிராவைப்பிரதேச பௌத்த முஸ்லிம் உறவுகளின் அண்மைக்காலப் போக்கினைக் கண்டறிதல், கெகிராவைப் பிரதேச பௌத்த முஸ்லிம் உறவுகளில் அண்மைக்காலப் போக்குகள் குறித்த இஸ்லாமியப் பார்வையைத் தெளிவுபடுத்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக அமையவுள்ளன.

இதன் குடித்தொகை மாதிரியானது கெகிராவைப் பிரதேசத்தில் பௌத்தர்களுடன் இணைந்ததாகக் காணப்படும் முஸ்லிம் குடியிருப்புக்களைக் கொண்டதும், பௌத்த குடியிருப்புக்களைச் சூழக் கொண்டதுமான பத்து கிராமங்களில் வாழ்கின்ற பௌத்தர்களையும் முஸ்லிம்களையும் உள்ளடக்கவுள்ளது. இதில் இங்கு வசிக்கும் முக்கிய பிரமுகர்கள் பத்துப்பேர், மதத்தலைவர்கள் பத்துப்பேர், முக்கிய நிர்வாகத்தலைவர்கள் மற்றும் சிலரும் உள்ளடக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வில் இவர்களிடம் பெறப்படும் தகவல்கள் செல்வாக்குச் செலுத்தும். மாதிரியின் தெரிவில், நேர்காணலுக்கு உட்படத்தப்படுபவர்கள் அவர்களின் அனுபவம், தகுதி என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு தரவுகளைப் பெறுவதற்கு எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட மாதிரித் தொகை பயன்படுத்தப்படவுள்ளது.

இவ்வாய்வின் தரவு சேகரிப்பு மூலங்களாக முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்படவுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக நேரடி அவதானம், கலந்துரையாடல், நேர்காணல், இலக்கு குழு கலந்துரையாடல் போன்ற முறைகள் மூலமாக தரவுகள் திரட்டப்படவுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் கெகிராவைப் பிரதேச செயலாளர் பிரிவு அறிக்கைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத் தளங்கள், ஒலிநாடாக்கள் என்பவற்றின் மூலம் பெறப்படவுள்ளன.

முதல் நிலைத்தரவுகள் மூலம் பெறப்படும் தகவல்கள் கணணி மென்பொருளான SPSS மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளதுடன் இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் கோட்பாட்டு ரீதியான பகுதிகள் நிறைவு செய்யப்படவுள்ளன. இவ்வாய்வு 5 அத்தியாயங்களாக அமையவுள்ளது. அதில் முதலாம் அத்தியாயம்: ஆய்வு முன்மொழிவையும், இரண்டாம் அத்தியாயம்: கோட்பாட்டு ரீதியான விளக்கத்தையும், மூன்றாம் அத்தியாயம்: கெகிராவைப் பிரதேசத்தில் சுதந்திரத்திற்குப் பின்னரான பௌத்த முஸ்லிம் உறவுகள், அதன் அண்மைக்காலப் போக்குகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகள் ஒழுங்கமைத்து பகுப்பாய்வு செய்யப்படல், நான்காம் அத்தியாயம்: கெகிராவைப் பிரதேச முஸ்லிம் பௌத்த உறவுகளின் அண்மைக்காலப் போக்குகளை இஸ்லாமிய நோக்கில் ஆய்வு செய்தல். ஐந்தாவது அத்தியாயம்: ஆய்விற்கான இறுதி முடிவுகளையும் ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் தெளிவுபடுத்தல் எனும் அடிப்படையில் அமையவுள்ளது.

இவ்வாய்வானது ஒரு முன்னோடி ஆய்வாக அமையவுள்ளதால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஆய்வுகளுக்கு பேருதவியாக இருக்கும்.

**கலைச்சொற்கள்**: *சகவாழ்வு, முஸ்லிம்கள், பௌத்தர்கள், அண்மைக்காலப்போக்குகள்*